(g) வெளிநாட்டு நிறுவனங்கள் (g) FIIs		ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil		ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil
(h) வெளிநாட்டு தொழில் மூலதன நிதிகள் (h) Foreign Venture Capital Funds		ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil		ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil
(i) ஏனையவை (குறிப்பிடவும்) (i) Others (specify)		ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil		ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil
துணை மொத்தம் (B) (1) Sub-Total (B) (1)		ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil		ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil
(2) நிறுவனங்கள் அல்லாதவை **(2) Non-Institutions**									
(a) கூட்டாண்மை நிறுவன அமைப்புகள் (a) Bodies Corp.		ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil		ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil
(i) இந்தியர் (i) Indian		ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil		ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil

பங்குதாரர்களின் வகைப்பாடு Category of Share Holders	ஆண்டின் தொடக்கத்தில் வைத்துள்ள பங்குகளின் எண்ணிக்கை No. of Shares held at the beginning of the year				ஆண்டின் இறுதியில் வைத்துள்ள பங்குகளின் எண்ணிக்கை No. of Shares held at the end of the year				இந்த ஆண்டில் ஏற்பட்ட மாற்றத்தின் சதவீதம் % change during the year
	டீமட் De-mat	திட்டம் சார்ந்தது Physical	மொத்தம் Total	மொத்த% பங்குகளின் % of Total Shares	டீமட் De-mat	திட்டம் சார்ந்தது Physical	மொத்தம் Total	மொத்த% பங்குகளின் % of Total Shares	
(ii) வெளிநாட்டவர் (ii) Overseas		ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil		ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil
(b) தனிநபர்கள் (b) Individuals		ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil		ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil
(i) ரூபாய் 1 லட்சம் வரையில் சொற்ப அளவிலான பங்குகளை வைத்துள்ள தனிநபர் பங்குதாரர்கள் (i) Individual share holders holding nominal share capital upto Rs. 1 Lakh.		ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil		ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil
(ii) ரூபாய் 1 லட்சத்திற்கும் அதிகமாக சொற்ப அளவிலான பங்குகளை வைத்துள்ள தனிநபர் பங்குதாரர்கள் (ii) Individual share holders holding nominal share capital exess of Rs. 1 Lakh.		ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil		ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil
(c) ஏனையவை (குறிப்பிடவும்) **(c) Others Specify**		ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil		ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil
துணை மொத்தம் (B) (2) Sub-Total (B) (2)		ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil		ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil
மொத்த பொதுப் பங்குகள் (B) = (B) (1) + (B) (2) Total Public Shareholding (B) = (B) (1) + (B) (2)		ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil		ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil
(c) GDRs & ADRs களுக்கான காப்பாளர் வைத்துள்ள பங்குகள் (c) Shares held by Custodian for GDRs & SDRs		ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil		ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil
பெரு மொத்தம் (A+B+C) Grand Total (A+B+C)		6340278 6340278	6340278 6340278	100 100		6340278 6340278	6340278 6340278	100 100	ஏதுமில்லை Nil

i. மேம்பாட்டாளரின் பங்குகள்

i. Shareholding of Promoters

தொ. எண் Sr.No.	பங்குதாரர்களின் பெயர் Shareholder's Name	ஆண்டின் தொடக்கத்தில் உள்ள பங்குகள் Shareholding at the beginning of the year			ஆண்டின் இறுதியில் உள்ள பங்குகள் Shareholding at the end of the year			
		பங்குகளின் எண்ணிக்கை No. of Shares	நிறுவனத்தின் மொத்த பங்குகளின் சதவீதம் % of total shares of the company	மொத்த பங்குகளின் அடமானம் வைக்கப்பட்ட/ வில்லங்கமான பங்குகளின் சதவீதம் % of shares Pledged/ encumbe	பங்குகளின் எண்ணிக்கை No. of Shares	நிறுவனத்தின் மொத்த பங்குகளின் சதவீதம் % of total shares of the company	மொத்த பங்குகளின் அடமானம் வைக்கப்பட்ட/ வில்லங்கமான பங்குகளின் சதவீதம் % of shares Pledged/ encumbe to total	இந்த ஆண்டில் பங்குகளில் ஏற்பட்ட மாற்றத்தின் சதவீதம் % Change during the year
1.	மேதகு தமிழ்நாடு ஆளுநர் Governor of Tamil Nadu	6340278	100	....	6340278	100	....	....
2.	மொத்தம் Total	6340278	100	....	6340278	100	....	....

ii. மேம்பாட்டாளரின் பங்குகளில் ஏற்பட்ட மாற்றம் (மாற்றமில்லையெனில் குறிப்பிடவும்)

ii. Change in Promoter's Shareholding (Please specify, if there is no change)

விவரங்கள் Particulars	ஆண்டின் தொடக்கத்தில் உள்ள பங்கு Shareholding at the beinning of the year		இந்த ஆண்டின் சேர்ந்து வந்த பங்குகள் Cumulative Shareholding during the year	
	பங்குகளின் எண்ணிக்கை No. of Shares	நிறுவனத்தின் மொத்த பங்குகளின் சதவீதம் % of total Shares of the Company	பங்குகளின் எண்ணிக்கை No. of Shares	நிறுவனத்தின் மொத்த பங்குகளின் சதவீதம் % of total Shares of the Company
1. ஆண்டின் தொடக்கத்தில் உள்ளவை 1. At the beginning of the year				
2. மேம்பாட்டாளரின் பங்குகளில் ஏற்பட்ட அதிகரிப்பு / குறைவுக்கான காரணங்களைக் குறிப்பிட்டு (எ.கா. ஒதுக்கீடு/மாற்றம்/போனஸ்/தொழிலாளர் சமவீதப்பங்கு முதலியவை) இந்த ஆண்டில் மேம்பாட்டாளரின் பங்கில் தேதிவாரியாக ஏற்பட்ட அதிகரிப்பு / குறைவு 2. Date wise inrease / decrease in Promotors shareholding during the year specifying the reasons for increase / decrease (e.g.allotment / transfer / bonus / sweat equity etc.) :		Nil இல்லை		
3. ஆண்டின் இறுதியில் உள்ளவை 3. At the End of the year				

V. கடன்பட்ட நிலை V. INDEBTEDNESS

i. நிலுவையிலுள்ள / சேர்ந்து வந்த வட்டித் தொகை உப்பட ஆனால், செலுத்தவேண்டிய தொகை நிலுவையற்ற நிறுவனத்தின் கடனற்ற நிலை

i. Indebtedness of the Company including interest outstanding / accured but not due for payment.

விவரங்கள் Particulars	பிணையக் கடன்கள் வைப்பீடுகள் நீங்கலாக Secured Loans excluding deposits	பிணையமற்ற கடன்கள் Unsecured Loans	வைப்பீடுகள் Deposits	மொத்த கடனற்ற நிலை Total Indebtedness
நிதியாண்டின் தொடக்கத்தில் கடனற்ற நிலை Indebtedness at the beginning of the financial year				
i. அசல் தொகை i. Principal Amount	2,89,71,141 2,89,71,141	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil
ii. செலுத்தவேண்டிய ஆனால் செலுத்தப்படாத வட்டி ii. Interest due but not paid	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil
iii. சேர்ந்து வந்த ஆனால் நிலுவையற்ற வட்டி iii. Interest accrued but not paid	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil
மொத்தம் (i+ii+iii) Total (i+ii+iii)	2,89,71,141 2,89,71,141	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil
நிதியாண்டில் கடனற்ற நிலையில் மாற்றம் – சேர்ந்தவை – குறைக்கப்பட்டவை Change in indebtedness during the financial year (Additional) (Reduction)	 1,63,56,248 2,89,71,141 1,63,56,248 2,89,71,141	 ஏதுமில்லை ஏதுமில்லை Nil Nil	 ஏதுமில்லை ஏதுமில்லை Nil Nil	 ஏதுமில்லை ஏதுமில்லை Nil Nil
நிகர மாற்றம் Net Change	1,26,14,893 1,26,14,893	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil
நிதியாண்டின் இறுதியில் கடனற்ற நிலை i. அசல் தொகை ii. செலுத்த வேண்டிய ஆனால் செலுத்தப்படாத வட்டி iii. சேர்ந்து வந்த ஆனால் நிலுவையற்ற வட்டி Indebtedness at the end of the financial year i. Principal Amount ii. Interest due but not paid iii. Interest accrued but not due	 1,63,56,248 ஏதுமில்லை ஏதுமில்லை 1,63,56,248 Nil Nil	 ஏதுமில்லை ஏதுமில்லை ஏதுமில்லை Nil Nil Nil	 ஏதுமில்லை ஏதுமில்லை ஏதுமில்லை Nil Nil Nil	 ஏதுமில்லை ஏதுமில்லை ஏதுமில்லை Nil Nil Nil
மொத்தம் (i+ii+iii) Total (i+ii+iii)	1,63,56,248 1,63,56,248	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil	ஏதுமில்லை Nil

vi. இயக்குநர்கள் மற்றும் முக்கியமான நிருவாகப் பணியாளரின் ஊதியம்.

vi. REMUNERATION OF DIRECTORS AND KEY MANAGERIAL PERSONNEL

A. மேலாண்மை இயக்குநர் / முழு நேர இயக்குநர்கள் மற்றும்/அல்லது மேலாளரின் ஊதியம்

A. Remuneration to Managing Director, Whole - time Directors and/or Manager

தொ. எ. Sl. No.	ஊதிய விவரம் Particulars of Remuneration	மேலாண்மை இயக்குநரின் / முழு நேர இயக்குநரின் / மேலாளரின் பெயர் Name of MD/WTD/Manager				மொத்த தொகை Total Amount
1.	மொத்த சம்பளம் Gross Salary					
a)	1961ஆம் ஆண்டு வருமான வரிச்சட்டத்தின் 17(1) பிரிவில் கண்டுள்ள விதித்துறைகளின்படி சம்பளம்	திருமதி. வி.அமுதாவள்ளி, இ.ஆ.ப Tmt. V. Amuthavalli, IAS., 01.04.2020 முதல் 31.03.2021 வரை				27,39,702
a)	Salary as per provisions Contained in section 17 (1) of the Income - tax Act, 1961.					27,39,702
b)	1961ஆம் ஆண்டு வருமான வரிச்சட்டத்தின் 17 (2) பிரிவின் கீழ் பிற வருமானங்களின் மதிப்பு					ஏதுமில்லை
b)	Value of Perquisites u/s 17 (2) Income - tax Act, 1961					Nil
c)	1961ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டத்தின் 17 (3) பிரிவின்கிழ் சம்பளத்திற்கு பதிலாக ஆதாயங்கள்.					ஏதுமில்லை
c)	Profits in lieu of salary undersection 17 (3) Income-tax 1961.					Nil
2.	பங்கு விருப்புரிமை					ஏதுமில்லை
2.	Stock Option					Nil
3.	தொழிலாளர் சமவீதப்பங்கு					ஏதுமில்லை
3.	Sweat Equity					Nil
4.	தரகுத்தொகை – ஆதாயத்தின் சதவீதமாக – ஏனையவை குறிப்பிடவும்					 ஏதுமில்லை ஏதுமில்லை
	Commission – As % of profit – Others, Specify...					 Nil Nil
5.	ஏனையவை குறிப்பிடவும்					ஏதுமில்லை
	Others, please specify					Nil
6.	மொத்தம் (A)					27,39,702
	Total (A)					
	சட்டத்தின்படி உச்சவரம்பு					
	Ceiling as per act					

B. பிற இயக்குநர்களுக்கு ஊதியம்
B. Remuneration of other Directors

ஊதிய விவரம் Particulars of Remuneration	இயக்குநரின்/முழுநேர இயக்குநரின்/மேலாளரின் பெயர் Name of MD/WTD/Manager				மொத்த தொகை Total Amount
1) தனிப்பட்ட இயக்குநர்கள் 1) Independent Directors – இயக்குநர்கள் குழுமக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான கட்டணம் – Fee for attending Board Committee Meeting – தரகுத் தொகை – Commission – ஏனையவை குறிப்பிடவும் – Others, Please Specify					
மொத்தம் **(1)** Total (1)					
2) நிருவாக இயக்குநர்கள் அல்லாத ஏனையோர் 2) Other Non-Executive Director			ஏதுமில்லை Nil		
– இயக்குநர்கள் குழுமக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கான கட்டணம் – Fee for attending Board Committee Meeting					
– தரகுத் தொகை – Commission					
– ஏனையவை குறிப்பிடவும் – Others, Please Specity					
மொத்தம் **(2)** Total (2)					
மொத்தம் (B) = (1+2) Total (B) = (1+2)					
நிர்வாகப் பணியாளரின் மொத்த உழைப்பூதியம் Total Managerial Remuneration					
சட்டத்தின்படி மொத்த உச்சவரம்பு Over all Ceiling as per the Act					

C. நிர்வாக இயக்குநர் / மேலாளர் / முழுநேர இயக்குநர் நீங்கலாக முக்கிய நிர்வாகப் பணியாளரின் உழைப்பூதியம்

C. REMUNERATION TO KEY MANAGERIAL PERSONAL OTHER THAN MD / MANAGER / WTD

Sl. No.	உழைப்பூதிய விவரங்கள் Particulars of Remuneration	முக்கியமான நிர்வாகப் பணியாளர் Key Managerial Personal		
		தலைமை நிர்வாக அதிகாரி CEO	நிறுவனச் செயலாளர் Company Secretary	மொத்தம் Total
1.	மொத்த சம்பளம் Gross Salary			
a)	1961ஆம் ஆண்டு வருமானவரிச் சட்டத்தின் 17 (1) பிரிவின் கண்டுள்ள விதித்துறைகளின்படி சம்பளம் Salary as per Provisions Contained in Section 17(1) of the Income - tax Act, 1961	–	திரு. பி.டி. தயானந்தன் Thiru. P.T. Dayanandan	16,31,222 16,31,222
b)	1961ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டத்தின் 17(2) பிரிவின் கீழ் பிற வருமானங்களின் மதிப்பு Value of perquisites u/s 17 (2) Income-tax Act, 1961			ஏதுமில்லை Nil
c)	1961ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டத்தின் 17(3) பிரிவின் கீழ் சம்பளத்திற்கு பதிலாக ஆதாயங்கள் Profits in lieu of Salary Undersection 17 (3) Income-tax Act, 1961			ஏதுமில்லை Nil
2.	பங்கு விருப்புரிமை Stock Option			ஏதுமில்லை Nil
3.	தொழிலாளர் சமவீதப் பங்கு Sweat Equity			ஏதுமில்லை Nil
4.	தரகுத் தொகை – ஆதாயத்தின் சதவீதமாக – ஏனையவை குறிப்பிடவும் Commission – As % of Profit – Others, Specify...			ஏதுமில்லை Nil
5.	ஏனையவை – குறிப்பிடவும் Others, Please Specify			ஏதுமில்லை Nil
6.	மொத்தம் Total			16,31,222 16,31,222

vii. அபராதங்கள் / தண்டனை / குற்றங்களை இணக்க முறையில் தீர்வு செய்தல் :

vii. PENALTIES / PUNISHMENT / COMPOUNDING OF OFFENCES:

வகை Type	நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு Section of the Companies Act	சுருக்க விவரம் Brief description	விதிக்கப்பட்ட அபராதம்/ தண்டனை/ இணக்கக் கட்டணம் குறித்த விவரங்கள் Details of Penalty/ Punishment/ Compounding fees Imposed	அதிகார மன்றம்/ நீதிமன்றம் Authority (RD)/ NCLT/Court	மேல்முறையீடு ஏதேனும் செய்யப்பட்டிருப்பின் Appeal made if any (give details)
A. நிறுவனம் **A. Company** அபராதம் Penalty தண்டனை Punishment இணைக்கக் கட்டணம் Compounding **B. இயக்குநர்கள்** **B. Directors** அபராதம் Penalty தண்டனை Punishment இணைக்கக் கட்டணம் Compounding **C. தவறிழைத்த ஏனைய அதிகாரிகள்** **C. Other Officers In Default** அபராதம் Penalty தண்டனை Punishment இணைக்கக் கட்டணம் Compounding			ஏதுமில்லை Nil		

எல். சந்தானராமன் & கோ
பட்டயக் கணக்கர்கள்

18/2, பழைய எண். 10A/2, லட்சுமிபுரம் தெரு,
ராயப்பேட்டை, சென்னை – 600 014.
தொலைபேசி எண்: 2811 7705
lsrandco88@gmail.com / lsrandco@bsnl.co

தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கு தனிப்பட்ட தணிக்கையாளர்கள் அறிக்கை

நிதிநிலை விவர அறிக்கைகள் குறித்த அறிக்கை

31.3.2021 ஆம் நாளன்றுள்ளவாறான ஐந்தொகை விவரக்கணக்கு, அந்த நாளுடன் முடிவடைந்த ஆண்டுக்கான ஆதாயம் / இழப்புக் கணக்கு மற்றும் ரொக்கப் புழக்க விவர அறிக்கை நிதிநிலை விவர அறிக்கைகள் பற்றிய குறிப்புகள் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் பற்றிய சுருக்கக் குறிப்பு மற்றும் பிற விளக்கமான தகவல் ஆகியவை இணைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் நிதிநிலை விவர அறிக்கைகளை நாங்கள் தணிக்கை செய்துள்ளோம்.

எங்களுடைய கருத்தின்படியும் எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல் மற்றும் விளக்கங்கள் ஆகியவற்றின்படியும், மேற்சொன்ன நிதிநிலை விவர அறிக்கைகள், 2013ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தில் கோரியுள்ள முறையில் தகவலை அளிப்பதுடன், இந்தியாவில் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்ளைகளுக்கு ஒத்திசைவான முறையில் 31–3–2021 ஆம் நாளன்றுள்ளவாறு நிறுவனத்தின் விவகாரங்களின் நிலை, அந்த நாளுடன் முடிவடைந்த ஆண்டுக்கான இழப்பு மற்றும் ரொக்கப் புழக்கம் ஆகியவை பற்றி உண்மையான மற்றும் நேர்மையான கருத்தை அளிக்கின்றன.

கருத்திற்கான அடிப்படை

நாங்கள், 2013ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் 143(10) ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தணிக்கைத் தாங்களுக்கு ஒத்திசைவான முறையில் எங்களுடைய தணிக்கையை நடத்தினோம். அந்தத் தரங்களின் கீழ் எங்களுடைய பொறுப்புகள், எங்களுடைய அறிக்கையின் நிதிநிலை விவர அறிக்கைகளின் தணிக்கைக்கான தணிக்கையாளரின் பொறுப்புகள் பிரிவில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளன. இந்திய பட்டயக் கணக்கர்கள் நிறுவனம் வெளியிட்ட நன்னெறி நடத்தை விதித் தொகுப்பு மற்றும் நன்னெறியின்படி செய்ய வேண்டியவை ஆகியவற்றுக்கு இணங்க, நாங்கள் நிறுவனத்திலிருந்து தனித்துவமாக உள்ளோம். இவை, 2013–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் விதித்துறைகள் மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகள் ஆகியவற்றின் கீழ் நிதிநிலை விவர அறிக்கைகள் குறித்த எங்களுடைய தணிக்கையுடன் தொடர்புடையவையாக உள்ளன. மேற்சொன்ன இவ்விரண்டிற்கும் இணக்கமான முறையில், நாங்கள், எங்களுடைய பொறுப்புகளை நிறைவேற்றியுள்ளோம். நாங்கள் பெற்றுள்ள தணிக்கை ஆதாரம், எங்களுடைய கருத்திற்கு ஒரு அடிப்படையை அளிப்பதற்குப் போதுமானது மற்றும் பொருத்தமானது என்று நாங்கள் நம்புகிறோம்.

விவகாரம் குறித்து வலியுறுத்துதல்

(i) நிதிநிலை விவர அறிக்கைகளின் குறிப்பு எண். 24.9.14 மீது கவனம் ஈர்க்கப்படுகிறது. அதில், நிறுவனம். 2014–15 ஆம் நிதியாண்டில், ரூபாய் 81,93,008/–அளவிலான விளம்பரச் செலவை மூலதனமாக்கியுள்ளது. என்றும், அது, அந்த ஆண்டில் செலவு செய்வதற்குப் பதிலாக 10 ஆண்டுகள் கால அளவில் கணக்கிலிருந்து தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், அதன் விளைவாக ரூபாய் 8.19 இலட்சம் – இந்த ஆண்டில் (முந்தைய ஆண்டு ரூபாய் 8.19 இலட்சம்) சாட்டப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ii) குறிப்பு எண். 24.9.8 (கணக்குகளுக்கான குறிப்புகள்) மீது கவனம் ஈர்க்கப் படுகிறது. அளிக்கப்பட்ட தகவல் மற்றும் நாங்கள் நம்பியுள்ள விளக்கங்களின் அடிப்படையில், வழக்கத்தை விட (இயல்பைக் காட்டிலும்) மிகுந்த கனமழை காரணமாக, ரூபாய் 230 இலட்சம் மதிப்புள்ள (முந்தைய ஆண்டு ரூபாய் 67 இலட்சம்) 26005 டன் அளவுக்கு (முந்தைய ஆண்டு 7429 டன்) மழையின் விளைவாக ஏற்பட்ட இழப்பாகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது ஒரு தொழில்நுட்ப விவகாரமாக உள்ளது. இந்த விவகாரங்கள் குறித்த எங்களுடைய கருத்து மாற்றியமைக்கப்படவில்லை.

நிதிநிலை விவர அறிக்கைகள் மற்றும் அது குறித்த தணிக்கையாளர் அறிக்கை நீங்கலாக ஏனைய தகவல்

ஏனைய தகவலுக்கு, நிறுவனத்தின் நிர்வாகம் மற்றும் இயக்குநர்கள் குழுமம் பொறுப்பாவர். ஏனைய தகவல் என்பதில், நிறுவனத்தின் ஆண்டறிக்கையில் சேர்க்கப்பட்ட தகவல் அடங்கியுள்ளது. ஆனால், நிதிநிலை விவர அறிக்கைகள் மற்றும் அது குறித்த எங்களுடைய தணிக்கையாளரின் அறிக்கை அதில் அடங்காது.

நிதிநிலை விவர அறிக்கைகள் குறித்த எங்களுடைய கருத்து, ஏனைய தகவலை கொண்டிருக்கவில்லை. அது குறித்து நாங்கள், யாதொரு வகையிலும் உத்தரவாத முடிவினை தெரிவிக்கவில்லை.

நிதிநிலை விவர அறிக்கைகளின் எங்களுடைய தணிக்கை தொடர்பாக, ஏனைய தகவலைப் படிக்க வேண்டியது. எங்களுடைய பொறுப்பாகும். அவ்வாறு படிக்கும் போது, ஏனைய தகவல், நிதிநிலை விவர அறிக்கைகளுடன் முரண்பட்டுள்ளதா அல்லது தணிக்கையின்போது நாங்கள் அறிந்தவற்றுடன் முரண்பட்டள்ளதா அல்லது தவறாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகத் தோன்றுகிறதா என்று நாங்கள் பரிசீலிக்கிறோம். நாங்கள் மேற்கொண்ட பணியின் அடிப்படையில் ஏனைய தகவல் தொடர்பாக தவறாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாக நாங்கள் முடிவெடுத்தால், நாங்கள், அதுகுறித்து தெரிவிக்க வேண்டியுள்ளது. இது தொடர்பாக நாங்கள் தெரிவிப்பதற்கு ஏதுமில்லை.

நிதிநிலை விவர அறிக்கைகளுக்கான நிர்வாகத்தின் பொறுப்பு

2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் 133ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுத்தரங்கள் உட்பட, இந்தியாவில் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின்படி, நிறுவனத்தின் நிதிநிலை, நிதிக் செயல்பாடு மற்றும் ரொக்கப்புழக்கம் பற்றிய உண்மையான மற்றும் நேர்மையான கருத்தை அளிக்கிற, இந்த நிதிநிலை விவர அறிக்கைகளின் தயாரிப்பு – தொடர்பாக, 2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் 134(5) ஆம் பிரிவில் தெரிவிக்கப்பட்டுள்ளவற்றுக்கு, நிறுவனத்தின் இயக்குநர்கள் குழுமம் பொறுப்பாகும். நிறுவனத்தின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும் பிற முறைகேடுகள், மோசடிகளைத் தடுப்பதற்கும், கண்டறிவதற்கும் போதிய கணக்கீட்டு கொள்கைகளை வைத்து, அதற்கு உரிய கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து, பயன்படுத்துவதற்கும் நியாயமான மற்றும் அறிவார்ந்த முடிவுகளையும், மதிப்பீடுகளைச் செய்வதற்கும், உண்மையான மற்றும் நேர்மையான கருத்தை தெரிவிக்கின்ற மற்றும் மோசடி அல்லது தவறு காரணமாக எதையும் தவறாகத் தெரிவிக்காமல் இருத்தல் ஆகியவற்றுடன், தொடர்புடைய நிதிநிலை விவர அறிக்கைகளின் தயாரிக்கப்பட்டு அளிப்பது தொடர்பாக கணக்கீட்டுப் பதிவுருக்களின் துல்லியத் தன்மை மற்றும் முழுமையான தன்மையை உறுதிசெய்வதற்காக செம்மையாக இயக்கப்படுகிற நிறுவன நிதி சார்ந்த கட்டுப்பாடுகளை வடிவமைத்தல், செயல்படுத்துதல் மற்றும் சட்டத்தின் விதித்துறைகளின்படி போதிய கணக்கீட்டுப் பதிவுருக்களை பராமரித்தல் ஆகியவையும் இந்தப் பொறுப்பில் அடங்கும்.

நிதிநிலை விவர அறிக்கைகளின் தயாரிப்பில், நிர்வாகம், நிறுவனத்தை மூட விழைந்தால் அல்லது இயக்கத்தை நிறுத்த விழைந்தால் அல்லது அவ்வாறு செய்வதைத் தவிர வேறு மாற்று ஏற்பாடு இல்லை என்பன போன்ற நேர்வுகள் நீங்கலாக, ஏனைய நேர்வுகளில், தொடர்ந்து இயங்குகிற திறனை நிறுவனம் பெற்றுள்ளதா என்பதை மதிப்பீடு செய்வதற்கும், தொடர்ந்து இயங்குகிற நிறுவனம் தொடர்பான பொருந்தக் கூடிய விவகாரங்களைத் தெரிவிப்பதும், தொடர்ந்து இயங்குகிற நிறுவனக் கணக்கீட்டு அடிப்படையைப் பயன்படுத்துவதும் நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

நிறுவனத்தின் நிதிசார்ந்த தகவல் அளித்தல் நடவடிக்கையைக் கண்காணிப்பது இயக்குநர் குழுமத்தின் பொறுப்பாகும்.

நிதிநிலை விவர அறிக்கைகளின் தணிக்கை குறித்த தணிக்கையாளரின் பொறுப்பு

மோசடி அல்லது பிழை காரணமாக, நிதிநிலை விவர அறிக்கைகள் முழுவதுமாக தவறாகத் தெரிவிக்கப்படவில்லை என்பதற்கான நியாயமான உறுதிமொழியைப் பெறுவதும், எங்களுடைய கருத்து அடங்கிய தணிக்கையாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எங்களுடைய நோக்கமாகும். நியாயமான உறுதிமொழி என்பது ஒரு உயரளவு உறுதிமொழியாகும். ஆனால், தணிக்கைத் தரங்களுக்கிணங்க நடத்தப்படுகிற ஒரு தணிக்கை, ஒரு முக்கியமான தகவல் தவறாகத் தெரிவிக்கப்படுகிறபோது, எப்போதும், அதைக் கண்டறியும் என்பதற்கு உத்தரவாதம் கிடையாது. அல்லது பிழை காரணமாக தவறான தகவல் தெரிவிக்கப்படலாம். அது, தனிப்பட்ட முறையில் அல்லது ஒட்டுமொத்தமாக இருக்குமெனில், அது, முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இந்த நிதிநிலை விவர அறிக்கைகளின் அடிப்படையில் எடுக்கப்பட்ட பயன்படுத்துவோரின் பொருளாதார முடிவுகளில் அவை தாக்கத்தை ஏற்படுத்தும் என்று நியாயமாக எதிர்பார்க்கலாம்.

தணிக்கைத் தரங்களுக்கிணங்க மேற் கொள்ளப்பட்ட தணிக்கையின் ஒரு பகுதியாக, நாங்கள் தணிக்கை முழுவதிலும் தொழில்ரீதியான மதிப்பீட்டைச் செய்துள்ளோம். மேலும், நாங்கள் கீழ்க்கண்டவற்றையும் செய்துள்ளோம்.

மோசடி அல்லது பிழை காரணமாக நிதிநிலை விவர அறிக்கைகள் தவறாகத் தெரிவிக்கப்படுகிற இடர்களைக் கண்டறிந்து, மதிப்பீடுசெய்து, அந்த இடர்களைத் தீர்வு செய்யத்தக்க வகையில் தணிக்கை நடைமுறைகளை வடிவமைத்து, மேற்கொண்டும் எங்களுடைய கருத்திற்கு ஒரு அடிப்படையை அளிப்பதற்குப் போதுமான மற்றும் பொருத்தமான தணிக்கை ஆதாரத்தைப் பெற்றுள்ளோம். மோசடியில், கூட்டுச்சதி, பொய்யான கையெழுத்து, வேண்டுமென்றே செய்கிற விடுபாடுகள், தவறாகத் தெரிவித்தல் அல்லது நிறுவனம் கட்டுப்பாட்டை மீறுதல் ஆகியவை சம்பந்தப்பட்டிருக்கலாம் என்பதால் மோசடி காரணமாக தவறாகத் தெரிவிக்கப்படுதலைக் கண்டுபிடிக்காமல் இருக்கிற இடர், பிழை காரணமாக, தவறாகத் தெரிவிக்கப்படுகிற இடரைக் காட்டிலும் கடுமையான ஒன்றாகும்.

சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு தணிக்கை நடைமுறைகளை வடிவமைப்பதற்காக, தணிக்கையுடன் தொடர்புடைய நிறுவனக் கட்டுப்பாடு பற்றிய புரிந்துணர்வை நாங்கள் பெற்றுள்ளோம். 2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் 143(3) (i) ஆம் பிரிவின் கீழ், நிறுவனம், போதிய நிறுவனஞ் சார்ந்த நிதிக் கட்டுப்பாட்டை நடைமுறையில் கொண்டுள்ளதா என்பது பற்றியும், அத்தகைய கட்டுப்பாடுகளின் செயல்பாட்டுப் பயனுடைமை பற்றியும் எங்களுடைய கருத்தை தெரிவிப்பதற்கும் நாங்கள் பொறுப்பாவோம்.

பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமுடைமை பற்றியும் நிருவாகம் செய்த கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய தகவல் ஆகியவற்றின் நியாயத்தன்மை பற்றியும் நாங்கள் மதிப்பீடு செய்துள்ளோம்.

தொடர்ந்து இயங்குகிற நிறுவன அடிப்படையிலான கணக்கீட்டை நிர்வாகம் பயன்படுத்தியது குறித்த பொருத்தமுடைமை பற்றியும் நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குகிற திறன் குறித்து குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டை ஏற்படுத்தக் கூடிய நிலைமைகள் அல்லது நிகழ்வுகள் தொடர்பான நிச்சயமற்ற தன்மை நிலவுகிறதா என்பது பற்றியும் பெறப்பட்ட தணிக்கை ஆதாரத்தின் அடிப்படையில் நாங்கள் முடிவு செய்துள்ளோம். நிச்சயமற்ற தன்மை நிலவுகிறது என்று நாங்கள் முடிவெடுத்தால், நிதிநிலை விவர அறிக்கைகளில் அது தொடர்பான தகவலை எங்களுடைய தணிக்கை அறிக்கை மூலம் நாங்கள் கவனத்தை ஈர்க்க வேண்டியுள்ளது. அத்தகைய தகவல் போதுமானதாக இல்லையெனில், எங்களுடைய கருத்தினை மாற்ற வேண்டியுள்ளது. எங்களுடைய முடிவுகள் எங்களுடைய தணிக்கையாளரின் அறிக்கை நாள் வரையில் பெறப்பட்ட தணிக்கை ஆதாரத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இருப்பினும், வருங்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள், நிறுவனத்தை, தொடர்ந்து இயங்குகிற ஒரு நிறுவனம் என்ற தகுதிநிலையைக் தொடராமல் அற்றுப் போகச் செய்யலாம்.

தகவல் தெரிவித்தல் உட்பட, நிதிநிலை விவர அறிக்கைகளின் ஒட்டுமொத்தமாக அளித்தல், கட்டமைப்பு, உள்ளடக்கம் மற்றும் நிதிநிலை விவர அறிக்கைகள், நேர்மையான முறையில் கொடுக்கல் – வாங்கல் மற்றும் நிகழ்வுகளைத் தெரிவிக்கிறதா என்பதையும் நாங்கள் மதிப்பீடு செய்துள்ளோம்.

தணிக்கையின் திட்டமிட்ட ஆய்வு வரம்பு, கால அளவு எங்களுடைய தணிக்கையின் போது நாங்கள் கண்டறிந்த நிறுவனக் கட்டுப்பாட்டில் உள்ள குறிப்பிடத்தக்க ஏதேனும் குறைபாடுகள் உட்பட, குறிப்பிடத்தக்க தணிக்கை முடிவுகள் ஆகியவை பற்றி ஏனையவற்றுடன், நிருவாகப் பொறுப்பு சாட்டப்பட்டுள்ளவர்களிடம் நாங்கள் தெரிவிக்கிறோம்.

தனித்துவம் தொடர்பான நன்னெறி அம்சங்களுக்கு இணக்கமாக நாங்கள் செயல்பட்டுள்ளோம் என்பது பற்றியும் எங்களுடைய தனித்துவத்தை தடுக்கக் கூடியவை என்று நியாயமாக கருதக் கூடிய அனைத்துத் தொடர்புகள் மற்றும் ஏனைய விவகாரங்கள் பற்றியும், பொருந்துகிற இடங்களில் அவற்றிலிருந்து பாதுகாக்கிற அம்சங்கள் எற்றியும் ஒரு விவர அறிக்கையுடன், நிருவாகப் பொறுப்பு சாட்டப்பட்டுள்ளவர்களுக்கு தகவல் அளிக்கிறோம்.

ஏனைய சட்டப்படிக்கான மற்றும் நெறிமுறைகளின்படி செய்ய வேண்டிய ஏனையவை குறித்த அறிக்கை

1. 2013ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் 143ஆம் பிரிவைச் சேர்ந்த (11) உட்பிரிவின்படி, மத்திய அரசு பிறப்பித்துள்ள 2016ஆம் ஆண்டு நிறுவனங்கள் (தணிக்கையாளர் அறிக்கை) ஆணையில் கோரியுள்ளவாறு, ஆணையின் 3 மற்றும் 4ஆம் பத்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள விவகாரங்கள் குறித்து, பொருந்தக் கூடிய அளவுக்கு 'இணைப்பு–A–யில்' அறிக்கை ஒன்றை, நாங்கள் அளித்துள்ளோம்.

2. நிறுவனத்தின் பதிவுருக்களின் சரிபார்ப்பின் அடிப்படையிலும், எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல் மற்றும் விளக்கங்களின் அடிப்படையிலும், 2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் 143(5)ஆம் பிரிவின்படி, இந்தியத்தணிக்கைத் துறைத் தலைவர் பிறப்பித்த நெறிமுறைகள் மற்றும் கூடுதல் நெறிமுறைகள் குறித்த அறிக்கை ஒன்றை, 'இணைப்பு–C–யில்' நாங்கள் அளித்துள்ளோம்.

3. சட்டத்தின் 143 (3) பிரிவில் கோரியுள்ளவாறு நாங்கள் பின்வருமாறு தெரிவித்துக் கொள்கிறோம்.

(அ) எங்களுடைய தணிக்கைக்கு அவசியமானவை என நாங்கள் கருதிய தகவல்கள் விளக்கங்கள் அனைத்தையும் நாங்கள் கோரிப் பெற்றுள்ளோம்.

(ஆ) சட்டப்படி வைத்து வர வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ள உரிய கணக்குப் புத்தகங்களை இந்நிறுவனம் முறையாக வைத்து வந்துள்ளது என்பது அத்தகைய கணக்குப் புத்தகங்களை நாங்கள் ஆய்வு செய்ததிலிருந்து தெரிய வருகிறது.

(இ) இந்த அறிக்கையில் கண்ட ஐந்தொகைக் கணக்கும், ஆதாய இழப்பு கணக்கும், ரொக்க புழக்க விவர அறிக்கையும் கணக்குப் புத்தகங்களுடன் ஒத்துள்ளன.

(ஈ) எங்களுடைய கருத்தின்படி இந்த அறிக்கையில் ஆய்வு செய்யப்பட்டுள்ள நிதிநிலை விவர அறிக்கைகள், சட்டத்தின் 133 ஆம் பிரிவு 2014 ஆம் ஆண்டு நிறுவனங்கள் (கணக்குகள்) விதிகளின் 7ஆம் விதி ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்குத் தரங்களுடன் ஒத்துப்போகின்றன.

(உ) இது, ஒரு அரசு நிறுவனமாக இருப்பதால், பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம் வெளியிட்ட 05.06.2015ஆம் நாளிட்ட G.S.R. 463 (E) அறிவிக்கையின்படி, இயக்குநர் எவரேனும் ஒரு இயக்குநராக நியமிக்கப்படுவதிலிருந்து தகுதியிழப்பு அடைந்துள்ளாரா என்பது தொடர்பான 2013ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் 164(2)ஆம் பிரிவு, இந்நிறுவனத்திற்குப் பொருந்தாது.

(ஊ) நிறுவனத்தின் நிதிநிலை குறித்து தகவல் தெரிவித்தல் மீதான உள் (நிறுவனம்) நிதிக் கட்டுப்பாடுகளின் போதிய தன்மை மற்றும் அத்தகைய கட்டுபாடுகளின் செயல்பாட்டுப் பயனுடைமை பற்றி எங்களுடைய தனி அறிக்கையில் "இணைப்பு B" ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

(எ) பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம் வெளியிட்ட 5.6.2015 ஆம் நாளிட்ட G.S.R (E) ஆம் எண் அறிக்கையைக் கருத்திற்கொண்டு, 2013 ஆண்டு நிறுவாகப் பணியாளரின் சட்டத்தின் 197 (16) ஆம் பிரிவிற்கிணங்க, நிறுவாகப் பணியாளரின் உழைப்பூதியம் தொடர்பான 2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் திருத்தப்பட்டவாறான 197 ஆம் பிரிவு இந்த நிறுவனத்திற்குப் பொருந்தாது.

(ஏ) 2014ஆம் ஆண்டு நிறுவனங்கள் (தணிக்கை மற்றும் தணிக்கையாளர்கள்) விதிகளின் 11ஆம் விதிக்கிணங்க, தணிக்கையாளர் அறிக்கையில் சேர்க்கப்பட வேண்டி பிற விவகாரங்களைப் பொறுத்த வரையில், எங்களுடைய கருத்தின் படியும், எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல் மற்றும் விளக்கங்களின் படியும் நாங்கள், பின்வருமாறு தெரிவிக்கிறோம் :

(i) நிறுவனம், அதனுடைய நிதிநிலையை பாதிக்கக் கூடிய நிலுவை வழக்குகள் பற்றி நிதிநிலை விவர அறிக்கைகளில் தெரிவித்துள்ளது காண்க. நிதிநிலை விவர அறிக்கைகளின் குறிப்பு எண் 24.1.

(ii) எதிர்பார்க்கக்கூடிய முக்கியமான இழப்புகளை ஏற்படுத்துகிற வகையிலான மூல ஒப்பந்தங்கள் உட்பட, யாதொரு நீண்ட கால ஒப்பந்தங்கள் எதனையும் நிறுவனம் பெற்றிருக்கவில்லை.

(iii) நிறுவனம், முதலீட்டாளர் விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பு நிதிக்கு தொகைகள் எதனையும் மாற்ற வேண்டியதில்லை.

எல். சந்தானராமன் & கோ
பட்டயக் கணக்கர்களுக்காக
பதிவு எண்: 003612S

ஓம்/–
(எல்.சந்தானராமன்)
பங்குதாரர்
உ.எண்.21867
UDIN: 21021867AAAABNI506

இடம் : சென்னை
நாள் : 13.09.2021

தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் உறுப்பினர்களுக்கு, ஏனைய சட்டப்படிக்கான மற்றும் நெறிமுறைகளின்படி செய்ய வேண்டிய ஏனையவை பற்றிய எங்களுடைய அறிக்கையில் குறிப்பிட்டுள்ள இணைப்பு (A)

i) அ) நிலையான சொத்துக்களின் அளவு, எண்ணிக்கை, இருப்பிடம் பற்றிய விவரங்கள் உட்பட முழு விவரங்களையும் தெரிவிக்கின்ற முறையான பதிவேடுகளை, இந்நிறுவனம் வைத்து வருகிறது.

ஆ) நிருவாகம், இந்த ஆண்டில், நிறுவனத்தின் நிலையான சொத்துக்களை, நேரடியாகச் சரிபார்த்துள்ளது. அத்தகைய சரிபார்ப்புகளின் போது எவ்வித முரண்பாடுகளும் கண்டறியப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது எங்களுடைய கருத்தின்படி சரிபார்ப்பின் கால இடைவெளி நியாயமாக உள்ளது.

(இ) நடைமுறை மூலதனத்திற்காக / கடன் வசதிக்காக பிணையமான வங்கியில் அடைமானமாக வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களின் உரிமை ஆவணம், நிறுவனத்தின் பெயரில் உள்ளன.

ii) அ) பொருள் விவரப் பட்டியில், நடப்பாண்டில் நிருவாகத்தால் நேரில் சென்று சரி பார்க்கப்பட்டுள்ளது. எங்களுடைய கருத்துப்படி அவ்வாறு சரிபார்த்த கால இடைவெளி நியாயமானதாகவும் உள்ளது.

ஆ) எங்களுடைய கருத்துப்படி இருப்புகளை சரிபார்ப்பதற்காக, இந்நிறுவனம் பின்பற்றுகிற முறை, இந்நிறுவனத்தின் அளவு மற்றும் அதன் தொழிலின் தன்மை ஆகியவற்றுக்கு ஏற்ப நியாயமானதாகவும் போதுமானதாகவும் உள்ளன. மேலோட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட உப்புப குவியலை நேரடியாக எடையிடுவதன் மூலமாகவும் அத்தகைய குவியல்களின் சராசரி எடையை, மொத்த அளவை நிச்சயித்தறிவதற்கான அடிப்படையாகக் கருத்துவதன் மூலமாகவும் இந்த நடைமுறையை மேம்படுத்தலாம்.

இ) எங்களுடைய கருத்துப்படியும் இருப்புப் பதிவேடுகளை நாங்கள் ஆய்வு செய்ததிலிருந்தும், இந்நிறுவனம் இருப்புப் பதிவேடுகளை சரியான முறையில் வைத்துள்ளது என்பது தெரியவருகிறது. இந்நிறுவனத்தின் இருப்புப் பதிவேடுகளையும் இருப்புகளையும் நேரடியாகச் சரிபார்த்த போது இவ்விரண்டுக்குமிடையே கண்டறியப்பட்ட முரண்பாடுகள், குறிப்பிடத்தக்க அளவுக்கு இல்லை.

iii) நிறுவனங்கள் சட்டத்தின் 189ஆம் பிரிவின் கீழ் வைத்து வரப்படுகிற பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனத்திற்கு, கம்பெனிக்கு அல்லது பிற தரப்பினருக்கு பிணையைக் கடன் அல்லது பிணையமற்ற கடன் எதுவும் நிறுவனம் அளிக்கவில்லை. எனவே, மேற்சொன்ன ஆணையின் 3 (iii) பகுதியின் விதித்துறைகள் நிறுவனத்திற்குப் பொருந்தாது.

iv) எங்களுடைய கருத்தின்படியும் எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல் மற்றும் விளக்கங்களின் படியும் சட்டத்தின் 185 மற்றும் 186 ஆம் பிரிவுகளுக்கு இணக்கமான முறையில், கடன்கள் எதனையும் வழங்கவில்லை அல்லது முதலீடுகள் எதனையும் செய்யவில்லை. எனவே, ஆணையின் 3 (iv) பகுதியின் விதித்துறைகள் இந்நிறுவனத்திற்குப் பொருந்தாது.

v) சட்டத்தின் 73, 74, 75 மற்றும் 76 ஆகிய பிரிவுகளின் பொருளுக்கு உட்பட்டும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளின் படியும், இந்நிறுவனம் பொது மக்களிடமிருந்து எவ்வித வைப்பீட்டுத் தொகைகளையும் ஏற்கவில்லை.

vi) நிறுவாகம் எங்களுக்கு அளித்த தகவல் மற்றும் விளக்கங்களின்படி, நிறுவனங்கள் சட்டத்தின் 148, (1) உட்பிரிவின் கீழ் நிறுவனத்தில் எந்தவொரு தயாரிப்புப் பொருளுக்கும் அடக்கவிலை பதிவுருக்களை வைத்து வருவது பற்றி மத்திய அரசு குறிப்பிடவில்லை.

vii) அ) எங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் விளக்கங்களின் படியும் இந்நிறுவனத்தின் கணக்குப் புத்தகங்களை, நாங்கள் தணிக்கை செய்தபோதும், மொத்தம் ரூபாய் 47.81 இலட்சம் அளவுள்ள வருங்கால வைப்பு நிதியை 1 முதல் 3 நாட்கள் காலதாமதத்துடன் செலுத்தியது. ரூபாய் 0.37 இலட்சத்தை, 85 முதல் 176 நாட்கள் காலதாமதத்துடன் செலுத்திய நேர்வுகள் ஆகியவை நீங்கலாக, தகராறுக்கு உட்படாத சட்டப்படி செலுத்த வேண்டிய வருங்கால வைப்புநிதி

உட்பட தொழிலாளர் காப்புறுதித் தொகை, வருமான வரி, சரக்குகள் மற்றும் சேவை வரி மற்றும் சட்டப்படி செலுத்த வேண்டிய பொருந்தத்தக்க ஏனைய முக்கியமான தொகைகளை, உரிய காலத்தில், தகுந்த அலுவலகத்தில் இந்நிறுவனம் முறையாக செலுத்தியுள்ளது என்பது தெரியவந்தது.

(ஆ) எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல் மற்றும் விளக்கங்கள் ஆகியவற்றின்படியும், நிறுவனத்தின் பதிவுருக்களை நாங்கள் ஆய்வு செய்ததன் அடிப்படையிலும், வருங்கால வைப்புநிதி, தொழிலாளர் காப்புறுதித் தொகை, வருமான வரி, சரக்குகள் மற்றும் சேவை வரி மற்றும் சட்டப்படி செலுத்த வேண்டிய ஏனைய தொகைகளை, 31.3.2021 ஆம் நாளன்றுள்ள நிலவரப்படி, அவை செலுத்த வேண்டிய நாளிலிருந்து ஆறுமாத கால அளவுக்கு மேல் செலுத்தாமல் நிலுவையாக வைத்திருக்கவில்லை.

(இ) தகராறு ஒன்றின் காரணமாக வைப்பீடு செய்யப்படாமலுள்ள (செலுத்தப்படாமலுள்ள) வருமானவரி மற்றும் வருங்கால வைப்புநிதி பற்றிய விவரங்கள் வருமாறு:

சட்டத்தின் பெயர்	நிறுவைத் தொகையின் தன்மை	தகராறில் உள்ள தொகை (ரூபாய் இலட்சத்தில்)	தொடர்புடைய கால அளவு	தகராறு நிலுவையாக உள்ள அமைப்பு
1961 ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டம்	வருமான வரி	46.05	வரி விதிப்பு ஆண்டு 2009–2010	வருமான வரி, உதவி ஆணையர், சென்னை.
1961 ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டம்	வருமான வரி	4.19	வரி விதிப்பு ஆண்டு 2011–2012	வருமான வரி, உதவி ஆணையர், சென்னை.
1961 ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டம்	வருமான வரி	41.17	வரி விதிப்பு ஆண்டு 2015–2016	வருமான வரி, மேல் முறையீட்டு நடுவர் மன்றம், சென்னை
1994 ஆம் ஆண்டு நிதிச் சட்டம்	சேவை வரி	26.37	2005–2006 ஆம் நிதியாண்டு முதல் 2008–09 ஆம் நிதியாண்டு வரையில்	க.ஆ.தீ.வி. வரி மேல்முறையீட்டு நடுவர் மன்றம், சென்னை.
1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் பல்வகை வழி வகைகள் சட்டம்	தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி	55.60	2015 ஜனவரி முதல் 2018 மே வரையில்	பணியாளர் வருங்கால வைப்பு நிதி மேல்முறையீட்டு நடுவர் மன்றம் (CGIT) மற்றும் தொழிலாளர் நீதிமன்றம்

viii) எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல் மற்றும் விளக்கங்களின் படியும், நிறுவனத்தின் பதிவுருக்களை நாங்கள் ஆய்வு செய்ததன் அடிப்படையிலும், நிறுவனம், வங்கியிடமிருந்து பெற்ற கடன்களை திருப்பிச் செலுத்தத் தவறியதில்லை.

ix) இந்நிறுவனம் தொடக்க பொது பத்திர வெளியீடு, கடனீட்டுப் பத்திரங்கள் உள்பட கூடுதல் பொது பத்திர வெளியீடு மூலம் இந்த ஆண்டில், பணம் எதனையும் திரட்டவில்லை. வங்கியிடமிருந்து பெற்ற குறித்த காலக்கடன் பெறப்பட்ட நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டது.

x) எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல் மற்றும் விளக்கங்கள் ஆகியவற்றின்படி, இந்த ஆண்டில், நிறுவனம் மோசடி செய்ததாக அல்லது நிறுவனத்தின் மீது அதனுடைய அதிகாரிகள் அல்லது பணியாளர்கள் மோசடி புகார்கள் எதுவும் செய்ததாகக் கண்டறியப்படவில்லை.

xi) பெரு நிறுவன விவகாரங்கள் அமைச்சகம் வெளியிட்ட 05.06.2015 ஆம் நாளிட்ட G.S.R.463(E) ஆம் எண் அறிவிக்கையைக் கருத்திற்கொண்டு, நிருவாகப் பணியாளர் உழைப்பூதியம் தொடர்புடைய 2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின்

197 ஆம் பிரிவு தொடர்பான (xi)ஆம் பகுதியின் விதித்துறை, ஒரு அரசு நிறுவனமாக உள்ள இந்நிறுவனத்திற்குப் பொருந்தாது.

xii) எங்களுடைய கருத்துப்படியும், எங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள தகவல் மற்றும் விளக்கங்களின் படியும் இந்த நிறுவனம், ஒரு நிதி நிறுவனம் அல்ல. அதற்கிணங்க ஆணையின் 3, (xii) ஆம் பத்தி இந்நிறுவனத்திற்குப் பொருந்தாது.

xiii) எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல் மற்றும் விளக்கங்களின் படியும், நிறுவனத்தின் பதிவுருக்களை, நாங்கள் ஆய்வு செய்ததன் அடிப்படையிலும், பொருந்தக்கூடிய இடங்களில், தொடர்புடைய தரப்பினருடனான கொடுக்கல் – வாங்கல் வணிக நடவடிக்கை சட்டத்தின் 177 மற்றும் 188 ஆம் பிரிவுகளுக்கு இணக்கமாக உள்ளன. அத்தகைய கொடுக்கல் – வாங்கல் நடவடிக்கைகள், பற்றிய விவரங்கள், பொருந்தத்தக்க கணக்கீட்டுத் தரங்களில் கோரியுள்ளவாறு நிதிநிலை விவர அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

xiv) எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல் மற்றும் விளக்கங்களின் படியும், நிறுவனத்தின் பதிவுருக்களை நாங்கள் ஆய்வு செய்ததன் அடிப்படையிலும், நிறுவனம் இந்த ஆண்டில், யாதொரு முன்னுரிமை ஒதுக்கீடு செய்யவில்லை. பங்குகளை அல்லது மாற்றத்தக்க கடனீட்டுப் பத்திரங்களை முழுமையாக்க அல்லது பகுதியாக வெளியிடவில்லை. 2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் 42ஆம் பிரிவின் விதித்துறைகளுக்கு இணக்கமான முறையில், நிறுவனம் தனியார் பங்குகளுக்கு ஒப்ப அறிவிப்பு அளித்துள்ளது. ஆண்டின் இறுதியில் வரப்பெற்று அடுத்த ஆண்டில் செய்யப்பட வேண்டிய பங்கு விண்ணப்பப் பணமான ரூபாய் 5 கோடி, வங்கியில், வைப்பீட்டில், தற்காலிகமாக முதலீடு செய்யப்பட்டுள்ளது.

xv) எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல் மற்றும் விளக்கங்களின்படியும், நிறுவனத்தின் பதிவுருகக்களை நாங்கள் ஆய்வு செய்ததன் அடிப்படையிலும், நிறுவனம் இயக்குநர்களுடன் அல்லது அவருடன் தொடர்புடைய நபர்களிடம் ரொக்கம் அல்லாத கொடுக்கல் – வாங்கல் வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

xvi) எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல் மற்றும் விளக்கங்களின்படி இந்நிறுவனம், 1934 ஆம் ஆண்டு இந்திய ரிசர்வ் வங்கி சட்டத்தின் 45–1ஏ பிரிவின் கீழ் பதிவு செய்யவேண்டிய அவசியமில்லை.

எல். சந்தானராமன் & கோ
பட்டயக் கணக்கர்களுக்காக
பதிவு எண்: 003612S

ஓம்/–
(எல்.சந்தானராமன்)
பங்குதாரர்
உ.எண்.21867

இடம் : சென்னை
நாள் : 13.09.2021

தனிப்பட்ட தணிக்கையாளர் அறிக்கைக்கு இணைப்பு "B"

2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் 143 ஆம் பிரிவின் 3 உட்பிரிவின் (i) பகுதியின் கீழ் நிதிசார்ந்த தகவல் அளித்தல் குறித்த நிறுவனஞ்சார்ந்த (உள்) நிதி கட்டுப்பாடுகள் குறித்த அறிக்கை.

31.03.2021 ஆம் நாளன்று முடிவடைந்த ஆண்டுக்கான நிறுவனத்தின் நிதிநிலை அறிக்கை குறித்த எங்களுடைய தணிக்கை தொடர்பாக அதே நாளன்றுள்ள நிலவரப்படி தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் நிதிச்சார்ந்த தகவல் அளித்தல் குறித்த நிறுவனஞ்சார்ந்த (உள்) நிதிக்கட்டுப்பாடுகளை நாங்கள் தணிக்கை செய்துள்ளோம்.

நிறுவனஞ்சார்ந்த நிதி கட்டுப்பாடுகளுக்கான நிருவாகத்தின் பொறுப்பு

இந்திய பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் வெளியிட்ட நிதிச்சார்ந்த தகவல் அளித்தல் குறித்த நிறுவனஞ்சார்ந்த நிதிக்கட்டுப்பாடுகளின் தணிக்கை பற்றிய வழிகாட்டிக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள நிறுவனஞ்சார்ந்த கட்டுப்பாட்டின் இன்றியமையாத அம்சங்களைக் கருதிப் பார்த்து, நிறுவனம் நிறுவியுள்ள நிதிச்சார்ந்த தகவல் அளித்தல் குறித்த வரையறை மீதான நிறுவனஞ் சார்ந்த கட்டுப்பாட்டின் அடிப்படையில் நிறுவனஞ்சார்ந்த கொள்கைகளை பின்பற்றுதல், அதனுடையசொத்துக்களைப் பாதுகாத்தல், மோசடிகள் மற்றும் தவறுகளைக் கண்டுபிடித்தல் மற்றும் தடுத்தல், கணக்கீட்டுப் பதிவுருக்களின் துல்லியத்தன்மை மற்றும் முழுமையான தன்மை, 2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் கோரிள்ளவாறு நம்பகமான நிதிசார்ந்த தகவலை உரிய காலத்தில் தயாரித்தல் உட்பட நிறுவனத்தின் தொழிலை முறையாகவும், செம்மையாகவும் நடத்துவதை உறுதி செய்வதற்காக, பயனுள்ள வகையில் செயல்படுத்தப்படுகிற நிறுவனஞ்சார்ந்த நிதிக்கட்டுப்பாடுகளின் செயலாக்கம் மற்றும் பராமரிப்பு, அதன் வடிவமைப்பு ஆகியவையும் இந்தப் பொறுப்புகளில் அடங்கும்.

தணிக்கையாளரின் பொறுப்பு

எங்களுடைய தணிக்கையின் அடிப்படையில் நிதி சார்ந்த தகவல் அளித்தல் குறித்த நிறுவனத்தின் உள்நிதிக்கட்டுப்பாடுகள் குறித்து எங்களுடைய கருத்தைத் தெரிவிப்பது எங்களுடைய பொறுப்பாகும். இந்திய பட்டயக்கணக்கர்கள் நிறுவனம் வெளியிட்ட நிதிச்சார்ந்த தகவல் அளித்தல் குறித்த நிறுவனஞ்சார்ந்த நிதிக்கட்டுப்பாடுகள் பற்றிய தணிக்கை குறித்து வழிகாட்டிக் குறிப்பு 2013ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் 143 (10) ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள தணிக்கை செய்தல் குறித்த தரங்கள் ஆகியவற்றுக்கிணங்க, நிறுவனஞ்சார்ந்த நிதிக்கட்டுப்பாடுகளின் தணிக்கை ஒன்றுக்குப் பொருந்தத்தக்க அளவுக்கு எங்களுடைய தணிக்கையை, நாங்கள் நடத்தியுள்ளோம். நாங்கள் நன்னெறிகளுக்கு இணக்கமாகச் செயல்பட்டு, நிதிச்சார்ந்த தகவல் அளித்தல் குறித்த நிறுவனஞ்சார்ந்த நிதிக்கட்டுப்பாடுகள் போதிய அளவுக்கு நிறுவப்பட்டு, பராமரிக்கப்படுகிறதா மற்றும் அத்தகைய கட்டுப்பாடுகள் அனைத்து முக்கியமான அம்சங்களில் பயனுள்ள முறையில் செயல்படுத்தப்படுகிறதா என்பது குறித்த நியாயமான உறுதிமொழியைப் பெறுவதற்காக, தணிக்கையைத் திட்டமிட்டு, செயல்படுத்த வேண்டும் என்று அந்தத் தரங்கள் மற்றும் வழிகாட்டிக் குறிப்பு கோருகிறது.

நிதிச்சார்ந்த தகவல் அளித்தல் மற்றும் அவற்றின் செயல்பாட்டின் பயனுடைமை குறித்த நிறுவனஞ்சார்ந்த நிதிக்கட்டுப்பாட்டு ஏற்பாட்டு முறைகள் போதுமான அளவுக்கு உள்ளதா என்பது பற்றிய தணிக்கை. ஆதாரத்தைப் பெறுவதற்காக நடைமுறைகளைச் செயல்படுத்துதல் எங்களுடைய தணிக்கையில் அடங்கும். நிதிச்சார்ந்த தகவல் அளித்தல் குறித்த நிறுவனம் சார்ந்த நிதிக்கட்டுப்பாடுகள் பற்றிய புரிந்துவார்வைப் பெறுதல், ஒரு முக்கியமான குறைபாடு காணப்பட்டால், அந்த இடரை மதிப்பிடு செய்து, மதிப்பீடு செய்யப்பட்ட இடரின் அடிப்படையில் நிறுவனக்கட்டுப்பாட்டை வடிவமைத்தல் மற்றும் அதன் செம்மையான செயல்பாட்டை ஆய்வு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியவை நிதிச்சார்ந்த தகவல் அளித்தல் குறித்த நிறுவனஞ்சார்ந்த நிதிக்கட்டுப்பாடுகள் பற்றிய எங்களுடைய தணிக்கையில் அடங்கியிருந்தது, தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள், மோசடி அல்லது தவறு காரணமாக, நிதிநிலை விவர அறிக்கைகள் முக்கியமாக தவறாகத் தெரிவிக்கப்படுகிற இடங்களை மதிப்பீடு செய்தல் உட்பட தணிக்கையாளரின் முடிவைச் சார்ந்திருக்கின்றன.

நாங்கள் பெற்றுள்ள தணிக்கை ஆதாரம், நிதிசார்ந்த தகவல் அளித்தல் குறித்த நிறுவனத்தின் உள் நிதிக்கட்டுப்பாடுகள் பற்றிய எங்களுடைய தணிக்கைக் கருத்திற்கு ஒரு அடிப்படையை அளிப்பதற்குப் போதுமானது மற்றும் பொருத்தமானது என்று நாங்கள் நம்புகிறோம்.

நிதி சார்ந்த தகவல் அளித்தல் குறித்த நிறுவனஞ்சார்ந்த நிதிக் கட்டுப்பாடுகளின் பொருள்:

நிதி சார்ந்த தகவல் அளித்தல் குறித்த ஒரு நிறுவனத்தின் உள் நிதிக்கட்டுப்பாடு என்பது, நிதிசார்ந்த தகவல் அளித்தலின் நம்பகத்தன்மை தொடர்பான ஒரு நியாயமான உறுதிமொழியைப் பெறுவதற்காகவும், பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட

கணக்கீட்டுக் கொள்கைகளுக்கிணங்க, வெளிக்காரணங்களுக்காக நிதிநிலை விவர அறிக்கையைத் தயாரிப்பதற்காகவும் வடிவமைக்கப்பட்டுள்ள ஒரு நடைமுறையாகும். நிதி சார்ந்த தகவல் அளித்தலில் கீழ்க்கண்டவற்றுக்கு வகை செய்கிற கொள்கைகளும், நடைமுறைகளும் அடங்கும். அவையாவன (1) நிறுவனத்தின் சொத்துக்களின் கொடுக்கல் – வாங்கல் பற்று வரவுகள், உரிமை மாற்றும் ஆகியவற்றை துல்லியமாகவும் நேர்மையாகவும் தெரிவிக்கின்ற கணிசமான விவரங்களுடன் கூடிய பதிவுருக்களை வைத்து வருதல் (2) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை களுக்கிணங்க, நிதி நிலை விவர அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு அனுமதியளிக்க அவசியமானதும், நிறுவனத்தின் நிருவாகம் மற்றும் இயக்குநர்களின் அனுமதியுடன் மட்டுமே நிறுவனத்தின் வரவு–செலவுகள், செய்யப்பட்டு வருகின்றன என்பதற்கும் நியாயமான உறுதிமொழியை அளிக்கிற வகையில் பற்று வரவுகள் பதிவு செய்யப்படுவதற்கு வகை செய்தல் (3) நிறுவனத்தின் நிதிநிலை விவர அறிக்கைகளில் முக்கியமான விளைவை ஏற்படுத்தக் கூடிய வகையில் நிறுவனத்தின் சொத்துக்களை அனுமதியற்ற வகையில் வாங்குதல், பயன்படுத்துதல், அல்லது உரிமை மாற்றம் செய்தலைத் தடுத்தல் அல்லது உரிய காலத்தில் கண்டுபிடித்தல் தொடர்பாக நியாயமான உறுதிமொழியை அளித்தல்.

நிதிசார்ந்த தகவல் அளித்தல் குறித்த நிறுவனஞ்சார்ந்த நிதிக்கட்டுப்பாடுகளின் இயல்பான வரையறைகள்

வஞ்சகக் கூட்டு சதி செயல் அல்லது கட்டுப்பாட்டை விஞ்சுகிற முறையற்ற நிறுவாகம், தவறு அல்லது மோசடி காரணமாக தவறாக தெரிவிக்கப்படுதல் அவை கண்டுபிடிக்கப்படாமல் போதல், ஆகியவற்றுக்கான சாத்தியக் கூறு உட்பட நிதி சார்ந்த தகவல் அளித்தல் குறித்த நிறுவனஞ்சார்ந்த நிதிக்கட்டுப்பாடுகளின் இயல்பான வரையறைகளின் விளைவாக மேற்சொன்ன நிகழ்வுகள் ஏற்படலாம். மேலும், வருங்காலங்களுக்கு நிதிசார்ந்த தகவல் அளித்தல் குறித்த நிறுவனஞ் சார்ந்த நிதிக்கட்டுப்பாடுகளின் ஏதேனும் மதிப்பீட்டின் முன் கணிப்புகள் இடருக்கு உட்பட்டதாக உள்ளது. அதாவது நிபந்தனைகளில் ஏற்படுகின்ற மாற்றங்களின் காரணமாக நிதிசார்ந்த தகவல் அளித்தக் குறித்த நிறுவனஞ்சார்ந்த நிதிக்கட்டுப்பாடு போதுமானதாக இல்லாமற் போகலாம் அல்லது கொள்கைகள் அல்லது இணக்கத் தன்மையின் அளவு சீர்குலையலாம்.

வரையறுக்கப்பட்ட கருத்திற்கான அடிப்படை

எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல் மற்றும் விளக்கங்களின்படியும், எங்களின் தணிக்கையின் அடிப்படையிலும் அதிகாரப் பகிர்வினை கணக்கீடுவதிலும் அணுகல் கட்டுப்பாட்டினை பொறுத்தவரையில் நிறுவனக் கட்டுப்பாடு நடைமுறைகளில் முக்கிய குறைபாடு இருப்பதை நாங்கள் கண்டறிந்தோம். இது நிதி அறிக்கையளித்தல் மீதான நிறுவனத்தின் உள்நிதி கட்டுப்பாடுகளின் செயல்பாட்டு முனைப்புத் திறனை பாதிக்கிறது. உள் தணிக்கை கட்டுப்பாடுகளை வலுப்படுத்தி சீரமைக்க வேண்டியுள்ளது.

முக்கிய குறைபாடு என்பது நிதிநிலை அறிக்கையளித்தல் மீதான நிறுவன நிதிக் கட்டுப்பாட்டில் உள்ள குறைபாடு அல்லது குறைபாடுகளின் கலவையாகும். நிறுவனத்தின் ஆண்டு நிதிநிலை கணக்கு விவர அறிக்கைகளின் பொருண்மை தவறாகத் தெரிவிக்கப்படுவது – உரிய நேரத்தில் தடுக்கப்படாததற்கு அல்லது கண்டறியப்படாததற்கு நியாயமான வாய்ப்பு உள்ளது. இந்த முக்கிய குறைபாடு நிறுவனத்தின் நிதிநிலை கணக்கு விவர அறிக்கைகள் மீதான எங்களுடைய மாற்றியமைக்கப்படாத கருத்தினைப் பாதிக்காது.

எங்களுடைய கருத்தின்படியும், எங்களுக்கு அளிக்கப்பட்ட தகவல் மற்றும் விளக்கங்களின் படியும், நிறுவனம், அனைத்து வகைகளிலும் நிதிசார்ந்த தகவல் அளித்தல் குறித்த நிறுவனஞ்சார்ந்த நிதிக்கட்டுப்பாடு முறைகளைப் பெற்றுள்ளது. இந்திய பட்டயக் கணக்கர்கள் நிறுவனம் வெளியிட்ட நிதிசார்ந்த தகவல் அளித்தல் குறித்த நிறுவனஞ்சார்ந்த நிதிக்கட்டுப்பாடுகளின் தணிக்கை பற்றி வழிகாட்டிக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள உள் கட்டுப்பாட்டின் இன்றியமையாத அம்சங்களைக் கருத்திற்கொண்டு, நிறுவனம் நிறுவியுள்ள நிதிசார்ந்த தகவல் அளித்தல் குறித்த நிறுவனஞ் சார்ந்த கட்டுப்பாட்டின் அடிப்படையில், நிதி சார்ந்த தகவல், அளித்தல் குறித்த அத்தகைய நிறுவனஞ் சார்ந்த நிதிக்கட்டுப்பாடுகள், 31.03.2021 ஆம் நாளன்றுள்ளவாறு, செம்மையான முறையில் செயல்படுத்தப்பட்டு வந்தன.

எல். சந்தானராமன் & கோ
பட்டயக் கணக்கர்களுக்காக
பதிவு எண்: 003612S

ஓம்/–
(எல்.சந்தானராமன்)
பங்குதாரர்
உ.எண்.21867

இடம் : சென்னை
நாள் : 13.09.2021

எல். சந்தானராமன் கோ
பட்டயக்கணக்கர்கள்

18/2 (பழைய எண்: 10 A/2), லட்சுமிபுரம் தெரு,
ராயப்பேட்டை, சென்னை – 600 014.
தொலைபேசி எண்: 28117705,
lsrandco88@gmail.com / lsrandco@bsnl.co

தனிப்பட்ட தணிக்கையாளர்கள் அறிக்கைக்கான இணைப்பு – "C"

தமிழ்நாடு உப்பு நிறுவனம்

31.3.2021 ஆம் நாளுடன் முடிவடைந்த ஆண்டுக்கான, 2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் 143(5) ஆம் பிரிவின் கீழ் இந்திய தணிக்கைத் துறை தலைவரின் (CAG) நெறிமுறைகளுக்கான பதில்

தொடர் எண்	நெறிமுறைகள்	பதில்
1	அனைத்து கணக்கீட்டு கொடுக்கல் – வாங்கல் நடவடிக்கைகளையும் தகவல் தொழில்நுட்ப ஏற்பாட்டு முறை மூலம் பரிசிலிப்பதற்கு நிறுவனம், ஏற்பாட்டு ஒன்றை நடைமுறையில் பெற்றுள்ளதா? ஆம் எனில், வெளியே தகவல் தொழில்நுட்ப ஏற்பாட்டு முறை மூலம் கொடுக்கல் – வாங்கல் நடவடிக்கைகளை பரிசீலிப்பதால், நிதி சார்ந்த சிக்கல்கள் எவையேனும் இருப்பின் அவை உட்பட கணக்குகளின் நேர்மைத் தன்மையில் ஏற்படக்கூடிய சிக்கல்கள் பற்றி தெரிவிக்கப்படலாம்.	அனைத்து கொடுக்கல் – வாங்கல் நடவடிக்கைகளும் 'டாலி' மென் பொருள் மூலம் பரிசீலிக்கப்படுகின்றன. நிருவாக அளவிலும் மேற்பார்வை அளவிலும், தகவல் பதிவு அளவிலும் மூன்று நிலையிலான கடவுச் சொல் கட்டுப்பாடகள் வாயிலாக, கணினி ஏற்பாட்டு முறையில் கணக்குகளின் நேர்மைத் தன்மை உறுதி செய்யப்படுகிறது. இருப்பினும் கணக்கீட்டுத் தேவைகளில் கட்டுப்பாட்டு அணுகல் குறித்த உள்கட்டுப்பாட்டு நடைமுறைகளை வலுப்படுத்தி, நெறிப்படுத்த வேண்டியுள்ளது.
2	கடனைத் திருப்பிச் செலுத்துகிற திறனை நிறவனம் பெற்றிராததால், கடன் கொடுத்தவர். நிறுவனத்திற்கு அளித்த பற்றுகளை / கடன்களை / வட்டி முதலியவற்றைக் குறைப்பதற்கான / கணக்கிலிருந்து தள்ளுபடி செய்வதற்கான கடன் சீரமைப்பு ஏற்பாடு அல்லது நேர்வுகள் ஏதேனும் தற்போது உள்ளதா? ஆம் எனில், அதனுடைய நிதி சார்ந்த தாக்கம் பற்றி தெரிவிக்கப்படலாம்.	கடன் கொடுத்தவர், நிறுவனத்திற்கு அளித்த பற்றுகளை / கடன்களை / வட்டி முதலியவற்றைக் குறைப்பதற்கான கணக்கிலிருந்து தள்ளுபடி செய்வதற்கான கடன் சீரமைப்பு ஏற்பாடு அல்லது நேர்வுகள் எவையுமில்லை.
3	குறிப்பிட்ட திட்டங்களுக்காக மத்திய / மாநில முகவரமைப்புகளிடமிருந்து வரபெற்ற / வர வேண்டிய நிதிகள், வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி, உரியவாற கணக்கில் காட்டப்படுகிறதா / பயன்படுத்தப்படுகிறதா? அவற்றிலிருந்து மாறுபட்ட நேர்வுகளைப் பட்டியலிடவும்.	ஆம்

31.3.2021 ஆம் நாளுடன் முடிவடைந்த ஆண்டுக்காக, இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் கூடுதல் நெறிமுறைகளுக்கு பதில்

தொடர் எண்	கூடுதல் நெறிமுறைகள்	கருத்துகள்
1	நிறுவனத்தின் விலை நிர்ணயக் கொள்கை, உற்பத்தி குறித்த நிலையான மற்றும் வெறுபடத்தக்க செலவுகள் மற்றும் நிருவாகச் செலவுகளின் ஒதுக்கீடுகள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளதா?	ஆம், எங்களிடம் அளிக்கப்பட்ட தகவல் மற்றும் விளக்கங்களுக்கிணங்க தயாரிப்புப் பொருளுக்கு விலையை நிர்ணயிக்கிற போது, நிறுவனம், உற்பத்தித் குறித்த அனைத்து நிலையான மற்றும் வேறுபடத்தக்க செலவுகள் மற்றும் நிருவாகச் செலவுகளை கணக்கில் எடுத்துக் கொள்கிறது.

2	இழப்புகளுக்கான வரையறைகளை நிறுவனம் நிர்ணயித்துள்ளதா? குறைதீர் நடவடிக்கை (பரிகார நடவடிக்கை) எடுப்பதற்காக, இயல்புக்கும் அதிகமான இழப்புகளை மதிப்பீடு செய்வதற்கான ஏற்பாட்டு முறை ஒன்று நடைமுறையில் உள்ளதா?	ஆம், நிறுவனம் இழப்புகளுக்கான வரையறைகளை நிர்ணயித்துள்ளது எங்களிடம் தெரிவித்துவாறு மழைப் பொழிவு ஏற்படுகிறபோது மட்டுமே இயல்புக்கும் அதிகமான இழப்பு ஏற்படுகிறது. நிதிநிலை விவர அறிக்கைகளுக்கான குறிப்பு எண். 24.9.8–ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு. இந்த ஆண்டில் இயல்பைவிட அதிகமான மழை இழப்பு 26005 டன்கள் ஆகும் (முந்தைய ஆண்டு 7429 டன்) அதன் மதிப்பு ரூபாய் 230 இலட்சம் ஆகும் (முந்தைய ஆண்டு ரூபாய் 67 இலட்சம்) 2021 ஜனவரியில் ஏற்பட்ட வழக்கத்திற்கும் அதிகமான கன மழை காரணமாக இது நேர்ந்துள்ளது. மழை காராணமாக எதிர்பார்க்க இயலாத இயல்பைவிட அதிகமான இருப்பு இழப்பைக் குறைப்பதற்கான குறைதீர் நடவடிக்கைகளை வலுப்படுத்த வேண்டியுள்ளது.
3	துணை தயாரிப்புப் பொருட்களையும், பணி நிறைவு பெற்ற பொருட்களையும் மதிப்பீடு செய்வதற்கான ஏற்பாட்டு முறையாது? அறிவிக்கப்பட்ட கொள்கையிலிருந்து மாறுபட்டு செயல்பட்ட நேர்வுகளைப் பட்டியலிடவும்.	பணி நிறைவு பெற்ற பொருட்களைப் பொறுத்த வரையில் உற்பத்தி செலவின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகிறது. அதில், நேரடியாக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிருவாகச் செலவுகள் அல்லது விற்பனை விலை இவற்றில் எது குறைவோ அதில் அடங்கும். ஆண்டின் இறுதியில், துணை தயாரிப்பு பொருட்களின் சரக்கு இருப்பு ஏதுமில்லை.
4	இந்த ஆண்டில் ஆலை மற்றும் இயந்திரத்தின் பயன்பாடு அதற்கு நிகராக அவற்றின் திறன் அளவு ஆகியவற்றைத் தெரிவிக்கவும்.	எங்களிடம் அளிக்கப்பட்ட தகவல் மற்றும் விளக்கங்களின் அடிப்படையில் இந்த ஆண்டில் நிறுவு திறன், உற்பத்தி மற்றும் பயன்பாட்டின் அளவு பற்றிய விவரங்கள் வருமாறு: பயன்பாட்டு அளவு தொழிலகத்தர உப்பு 56.8 சதவீதம் (கடந்த ஆண்டு 61.3%) அயோடின் செறியூட்டப்பட்ட தூள் உப்பு 51.2 சதவீதம் (கடந்த ஆண்டு 59.4%) அயோடின் செறியூட்டப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட தூள் உப்பு 48.4 சதவீதம் (கடந்த ஆண்டு 49.7%)
5	நேரடிச் சரிபார்ப்பு, இருப்பை மதிப்பீடு செய்தல், விற்பனையாகாத சரக்குகளைக் கணக்கீடு செய்தல், நேரடிச் சரிபார்ப்பின் போது கண்டறியப்பட்ட இருப்பு போன்றவை மிகையான இருப்பை கணக்கிடுதல் ஆகியவற்றுக்கு செம்மையான ஏற்பாட்டு முறையினை நிறுவனம் பெற்றுள்ளதா?	எங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள தகவல் மற்றும் விளக்கங்கிணங்கவும், எங்களுடைய தணிக்கையின் அடிப்படையில் நிறுவனம் அலுவலர் குழு ஒன்றை ஏற்படுத்தி அதன் நேரடி சரிபார்ப்பு முறையை மேற்கொண்டு வருவது ஒவ்வொரு ஆண்டும் அனைத்து பொருட்களும் வருவதும் ஒவ்வொரு ஆண்டும் அனைத்து பொருட்களும், பணி நிறைவு பெற்ற பொருட்களும் நேரடியாக சரிபார்க்கப்பட்டு, இருப்பு மதிப்பீடு செய்வதற்காக இருப்பு விவர அறிக்கை தயார்செய்யப்படுகிறது. வழக்கமாக சரிபார்ப்பு மேற்கொள்ளப்படும் முறையான பரும அளவு பகுப்பாவின் அடிப்படையில் இருப்பில் உள்ள உப்பு நேரடியாகச் சரிபார்க்கப்பட்டு, குறைவு/ மிகை உறுதி செய்யப்படுகிறது. மற்றும் இருப்பில் சரிக்கட்டப்படுகிறது. இருப்பின் தன்மையைக் கருத்திற்கொண்டு பார்க்கும் போது, நேரடிச் சரிபார்ப்பு செம்மையாக உள்ளது. ஆனால் அனைத்துக் குவியல்களிலும் உள்ள மொத்த அளவை உறுதி செய்வதற்கு தெரிவு செய்யப்பட்ட உப்பு குவியலை நேரடியாக எடையிட்டு, அத்தகைய குவியலின் சராசரி எடையை அடிப்படையாகக் கொள்ளலாம். எனவே, நிதிநிலை விவரம் வழக்கமான மழையின் காரணமாக ஏற்பட்ட இழப்பு, சுத்திகரிப்பு செய்ததால் ஏற்பட்ட இழப்பு முதலியவற்றிற்காக சரிகட்டிய பின்னர் இருப்பில் உள்ள உப்பு குறித்த விவரங்கள் புத்தகக் கணக்கின் படி ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இருப்புகள் கண்டறியப்பட்டு, அவற்றுக்காக ரூபாய் 39.81 இலட்சம் என மொத்தம் ரூபாய் 69.23 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (முந்தைய ஆண்டு ரூபாய் 29.42 இலட்சம்)

எல். சந்தானராமன் & கோ
